விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்.
தேசிய தர மறுமதிப்பீட்டின் கீழ் 'ஏ' அந்தஸ்து தகுதி பெற்றது
குறைந்த கட்டணத்தில் உயர்தரக் கல்வி

ESTD: 1947

* * * * *

20.06.2024

சுற்றறிக்கை

ராகிங் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் விதமாக 24.06.2024 திங்கட்கிழமையன்று காலை 10.25 மணியளவில் கீழே கொடுக்கப்பட்டுள்ள 'ராகிங்கிற்கு எதிரான உறுதிமொழி' எடுக்குமாறு இளங்கலை இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மாணவ/மாணவியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கல்லூரி முதல்வர்

பெறுநர்

வகுப்புச் சுற்றறிக்கை - துறைத் தலைவர்கள் மூலமாக.

IQAC

## ராகிங்கிற்கு எதிரான உறுதிமொழி

ராகிங் கொடுஞ்செயலால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான், ராகிங் கொடுஞ்செயல் புரியவோ, அதற்கு துணைபோகவோ மாட்டேன். மேலும், எனது குடும்பத்தினர்களுக்கும் நண்பர்களுக்கும் ராகிங் கொடுஞ்செயல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவேன்.

ராகிங் செய்தல், மனதளவில் நோகடித்தல், கேலி செய்தல் ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் ராகிங்கை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணைநிற்பேன். மாணவர்களின் வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.